24-6

KOVILOOR ANDAVAR
A. No. 2714
LIBRARY. KOVILOOR

7. கோவிலூர் கொற்றவாளீசுவரம் · ஒரு வரலாற்றுப் பார்வை

சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூரிலிருந்து காரைக்குடி செல்லும் சாலையில் காரைக்குடிக்கு முன்பாக அமைந்துள்ள சிற்றூர் கோவிலூர். இவ்வூர் இன்று இப்பெயர் பெற்றிருந்தாலும் இதன் முன்னைப்பெயர் கழனி வாசல் என்பதாகும். இங்கு கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டளவில் கட்டப்பட்ட சிவன் கோவில் இன்று கொற்றவாளீசுவரம் என்று பெயர் பெற்றுள்ளது. இக்கோயிலின் காரண மாகவே இன்று இவ்வூர் கோவிலூர் என அழைக்கப் படுகிறது. இப்பகுதிகளில் எத்தனையோ ஊர்களில் பழமையான கோயில்கள் இருந்தாலும் இவ்வூர் மட்டும் கோயிலூர் என்றே அழைக்கப்படுவதற்கு இங்கு அமைந்துள்ள ஆதீனமும் ஒரு காரணமாக இருக்கலாம். இவ்வூர்க் கோயிலின் வரலாற்றையும், கட்டுமான அமைப்பையும், கலைச் செல்வங் களையும் பற்றிய ஒரு சிறிய ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

தலபுரணம் கூறும் செய்தி: இவ்வூர் பற்றிய புராணச் செய்திகள் ஸ்கந்தபுராணத்தில் இருப்பதாக அறிந்து அதனைத் தமிழாக்கி காரைக்குடி, சேவு. பழ. பழனி யப்பன் அவர்கள் வெளியிட்டுள்ளார். இந்நூலின் மூலம் சில செய்திகளை அறியமுடிகிறது. இவ்வூருக்கு கழனிவாசல், சாலிவாடி, வன்னிவனம், ஸ்ரீவல்லபம், சமிவனச்சேத்திரம் என்று பலபெயர்கள் முன்னாளில் வழங்கப்பட்டுள்ளன. இவ்வூரின் அருகே ஓடும் ஆறு தேனாறு எனப்படுகிறது. அதன் காரணமாகவே

இங்குள்ள தெப்பகுளத் தீர்த்தம் மதுபுஷ்கரணி என வழங்கப் படுகிறது. இங்கு கோயில் கொண்டுள்ள இறைவனின் பெயர் திரிபுவனேசுவரர் என்றும் இராஜகட்க பரமேசுவரர் என்றும் அறியப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டுகளில் இறைவனின் பெயர் கொற்றவாளீசுவரமுடைய நாயனார் என்று குறிக்கப் படுகிறது. இராஜகட்க பரமேசுவரர் என்னும் வடமொழிப் பெயரின் தமிழ்வடிவமே கொற்றவாளீசுவரர் என்பதாகும்.

கோயில் தோன்றிய காரணம்: இவ்வட்டாரத்தில் மிகப்புகழ் பெற்ற ஊர்களில் ஒன்று காளையார் கோயில். இங்கு வீரபாண்டியன் என்றும் பாண்டிய மன்னன் ஆட்சிசெய்து வந்தான். ஒரு நாள் வேடர் பலர் உடன்வர அவன் காட்டிற்குச் சென்று வேட்டையில் ஈடுபட்டான். அப்போது ஒரு மானை வேட்டையாட எண்ணித் துரத்திச் சென்றான். மாயமான் ஆன அம்மான் அரசனை வஞ்சகமாக சமீவனச் சேத்திரம் வரை (இன்றைய கோவிலூர்) இழுத்துச் சென்றது, மானைப் பிடிக்க முடியாத மன்னன் களைப்புற்றான். அங்கிருந்து மது தீர்த்தத்தில் நீராடி தன் களைப்புத்தீரத் தூங்கினான். அப்போது தன்னுடைய உடைவாளை அருகில் ஊன்றிவைத்தான். அவனது கனவில் பிராமணன் ஒருவனைப் புலிபற்றிச் செல்லும்படியான ஒரு கனவைச் சிவபெருமான் உண்டாக்கினார். அப்பிராமணனைக் காப்பாற்ற எண்ணிய அரசன் தன் உளடவாளை (ராஜகட்கத்தை) தேடினான். அது காணவில்லை. உடனே அவ்வரசன் பிராமணனுக்குப் பதிலாகத் தன்னை உண்ணுமாறு புலியிடம் வேண்டினான். ஆனால் புலி அதற்கு உடன் படவில்லை. ஆயினும் அரசன் புலியின் வாயில் தன் தலையைக் கொடுத்தான். உடனே அப்புலியும் பிராமணனும் மறைந்தனர். தேவர்கள் பூமாரி பொழிந்து பாண்டிய அரசனை வாழ்த்தினர்.

இந்நிலையில் அரசனைக் காணாது தேடிவந்த அவன் படையினர் அச் சோலையை நன்கு ஆராய்ந்தனர். அங்கு ஒரு வன்னிமரத்திரன் கீழே சுயம்புவான சிவலிங்கம் ஒன்றும் அதன் அருகே இராஜவாள் ஒன்றும் இருப்பதை அறிந்து அரசனிடம் தெரிவித்தனர். அரசன் அச்சிவலிங்கத்தை வணங்கினான். உடனே சிவபெருமான் தோன்றி அவனது வீரத்தையும், தைரியத்தையும், கருணையையும் சோதிக்கவே தான் புலியையும் பிராமணனையும் அனுப்பினேன் என்று கூறி உன்னுடைய செயலை மெச்சி உனக்கு இந்த அரசவாளை வழங்குகிறேன்

என்று கூறி வாளைக் கொடுத்து மறைந்தார். அன்று முதல் இவ்விடம் சமிவனச் சேத்திரம் என்றும் இங்கு அப்பாண்டிய மன்னனால் கட்டப்பட்ட கோயில் கொற்றவாளீசுவரம் (ராஜகட்கபரமேசுவரம்) என்றும் பெயர் பெற்றது.

'ஸ்தலபுராணம்' கூறும் செய்தி இப்படி இருக்க வரலாற்று ரீதியாக இக்கோயிலை நாம் அணுகினால் இது பிற்காலப்பாண்டியர் ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில் என்று உறுதியாக நம்பலாம். கோயில் கட்டுமான அமைப்பும், இங்குள்ள பிற்காலக் கல்வெட்டுகளும் இதனை உறுதி செய்வனவாக உள்ளன. புராணம்கூறும் காளையார் கோயில் வீரபாண்டியன் தொடர்பும் ஓரளவுக்கு ஒத்துவரக் கூடியதாகலாம். காளையார் கோயிலின் முன்னைப் பெயர் கானப் பேரெயில் என்பது சங்ககாலத்திலேயே இங்கு கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்னும் மன்னன் ஆண்டதாக செய்தி உண்டு. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இங்கு இருந்த சிவன் கோயில் தேவாரப் பாடல் பெற்றது. பிற்காலப்பாண்டியர்களாலும் இங்குள்ள கோயில் நன்கு பராமரிக்கப்பட்டது. எனவே கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவிலும் பல பாண்டிய மன்னர்கள் இப்பகுதியின் ஆட்சியில் கவனம் செலுத்தியுள்ளனர்.

காளையார் கோயில் கல்வெட்டு ஒன்றில் (ARE 346/1925) மாறவர்மன் வீரபாண்டியன் என்ற ஒரு மன்னன் இடம் பெற்றுள்ளான். இவனுடைய காலத்தை கி.பி. 1334 - 1367 என்று கணிப்பார் குடந்தை சேதுராமன். எனவே ஸ்தலபுராணம் கூறும் வீரபாண்டியன் இக்காலத்தில் வாழ்ந்த வீரபாண்டியனாகவே இருக்கலாம். இவன் காலத்தில் இக்கோவில் கட்டப்பட்டிருக்கலாம். என்று கொள்வதற்குக் கட்டடக்கலைப்பாணி உதவி செய்கிறது. வேட்டைக்கதை கற்பனை என்று கொண்டாலும் கூட கோயில் வீரபாண்டியனால் கட்டப்பட்டிருக்கலாம் என்று கொள்வதற்கு அது தடையாக இராது.

திருநெல்லியம்மன் தோற்றம்:

இக்கோயிலின் இறைவன் கொற்றவாளீசர்க்கு இணையாகப் பேசப்படும் இறைவியின் பெயர் திருநெல்லி அம்மன் என்பதாகும். இவ்வம்மனின் தோற்றத்திற்கும் இங்கு ஒரு கதை செவிவழிச் செய்தியாக வழங்கப்படுகிறது.

கழனிவாசல் என்றும் சாலிவாடி என்றும் பெயர் வழங்கும் இவ்வூரில் சிவகுப்தன், அவன் மனைவி சுதன்மை ஆகிய இருவரும் இவ்வூர் இறைவன்பால் பெரும்பக்தி செலுத்தி வந்தனர். இவர்களுக்கு அரதனவல்லி என்ற பெயரில் ஒருமகள் இருந்தாள். கோயில் அருகில் இருந்த நெல்வயலில் கதிர் முற்றத் துவங்கியது. நெல்காவலுக்குத் தம் மகள் அரதன வல்லியை அனுப்பினர் பெற்றோர். அவளோ விளையாட்டுப் பருவத்தினள். கதிர்களைக் காவல் செய்யாமல் தோழியருடன் விளையாட்டில் ஈடுபட்டாள். அம்பிகை, சுதன்மையின்பால் அன்பு கொண்டு தானே அரதன வல்லியின் வடிவம் கொண்டு நெல்லுக்குக் காவலாய் நின்றாள். நண்பகல் உணவு எடுத்துக் கொண்டு மகளுக்கு ஊட்டுவதற்காக வந்தாள் சுதன்மை. கம்பு ஒன்றினால் கிளிகளை ஓட்டிக் கொண்டிருந்த மகளைக் கண்டு மனம் மகிழ்ந்து அவள்கையில் சாதம் எடுத்துவைக்க ருசித்து உண்டாள் அரதனவல்லிவடிவில் இருந்த அம்மை. சற்று நேரம் கழித்து உண்மையான மகள் அரதனவல்லி அன்னை சுதன்மையிடம் வந்து தனக்குப் பசிக்கிறது என்று கூறி உணவு கேட்டாள். இப்போது தானே உனக்குச் சாதம் ஊட்டினேன் என அன்னை சொல்ல அவளோ நான் வயல்பக்கமே போகவில்லையே எனச் சொன்னாள். வந்தவள் இறைவியே என அறிந்துகொண்ட சுதன்மை அதிசயித்துத் தேவியின் கருணையை உணர்ந்தாள். அன்று முதல் நெல்லைக் காத்து நின்றதால் அவ்வன்னைக்குத் திருநெல்லியம்மன் எனப் பெயர் வழங்குவதாயிற்று. இக்கதையின் மூலம் இப்பெயர் ஒரு பிற்காலப் பெயர் என்பதும் இறைவிக்கான கோயிலும் பிற்காலத்தில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் தெரியவரும். இப்போதுள்ள அம்பிகையின் கோயிலும் மிகவும் பிற்காலத்தில் எடுக்கப்பட்டு மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள் காட்டும் வரலாறு

இக்கோயிலில் சில கல்வெட்டுகளை 1962-63-இல் தொல்லியல் துறையினர் படி எடுத்து ஆங்கிலக் குறிப்புகளை மட்டும் வெளியிட்டுள்ளனர். இங்குள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது கி.பி. 1381-ஆம் ஆண்டைச் சேர்ந்தது. இவ்வாண்டில் இப்பகுதியில் விஜய நகர அரசர்களின் ஆட்சி நிலவியது. சாவண உடையார் என்பவர் இப்பகுதியின் ஆளுநராக இருந்துள்ளார். இவர் முதலாம் கம்பண்ணரின் மகனாவார். இவரது காலக்

கல்வெட்டுகள் புதுக்கோட்டை, திருக்கோகர்ணம் பகுதியில் காணப்படுகின்றன. கொற்றவாளீசுவரர் கோயிலில் காணப்படும் இவர் காலத்துக் கல்வெட்டு பிராமண சமூகத்தவரிடையே திருமணத்தின் போது நிலவிய வரதட்சணைப் பிரச்சினையைப் பற்றிய செய்தியைத் தருவதாக உள்ளது. அதிகப்படியான சொத்துக்களை தட்சணையாகப் பெற்றுப் பெண் கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. இதனைத் தடுத்து எண் கழஞ்சு பொன்னும் எண் கழஞ்சு வெள்ளியும் மட்டும் பெற்றுக்கொண்டு பெண்களைக் கன்னியாதானமாக மணம் செய்விக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இம் முடிவு எட்டப்பட்ட கூட்டத்தில் காங்கேயராயர் என்னும் அதிகாரியும், பல அக்ரஹார ஜனங்களும், தூரதேசப்பட்டர்களும், கிராமஜனங்களும் கலந்து கொண்டனர். இவ்வாவணத்தில் பல அதிகாரிகளும் கையொப்பமிட்டுள்ளனர். கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் நிலவிய பெண்ணுக்கு ஆண் வரதட்சணைக் கொடுக்க வேண்டியிருந்த நிலையை இக்கல்வெட்டு காட்டுகிறது. இதே போன்றதொரு கல்வெட்டு ஏறக்குறைய இதே சமகாலத்தில் விரிஞ்சிபுரம் கோயிலில் இருப்பதையும், அதுவும் பிராமணப் பெண்களுக்கு வழங்கப்படும் தட்சணை பற்றியதே என்பதும் இங்கு ஒப்பிட்டு நோக்கத்தக்கதாகும். இதுவே பிற்காலத்தில் மணமகனுக்கு வழங்கப்பட வேண்டியதாக மாறியுள்ளது.

அடுத்தகல்வெட்டு விஜய நகர அரசர் சதாசிவராயர் காலத்தில் (கி.பி. 1550-இல்) அவருக்கு அடங்கிய சிற்றரசராக இப்பகுதியில் ஆட்சி செய்த சூரைக்குடி அரசின் விசயாலயத் தேவர் என்பவரின் நிலக்கொடையைப் பற்றிக் கூறுகிறது. விசையாலய தேவர் மரபினர் கி.பி. 13-14-ஆம் நுற்றாண்டிலிருந்து சூரைக்குடி என்னும் பகுதியின் தலைவர்களாக இப்பகுதியின் ஆளுநர்களாக இருந்துள்ளனர். அவர்களில் இக்கல்வெட்டுக் குரிய தலைவன் தீராவினை தீர்த்த விசயாலய தேவர் குமாரர் சீரங்கநாதரான பெற்றப்ப விசயாலய தேவர் என்பவராவர். இவர் கோவிலூர் கொற்றவாளீசுவரர் கோயிலில் சுப்பிரமணிய பிள்ளையார்க்கு வேண்டிய அமுது படைக்கவும் திருவிளக்கு எண்ணெய்க்கும் திருநாமத்துக்காணியாக இரண்டு மாநிலம் கொடையளித்துள்ளார்.

இதே விசயாலய தேவர் பெத்தப்பர் காலத்தில் (கி.பி. 1555-இல்) பெரும்பற்றப்புலியூர் (இன்றைய சிதம்பரம்) மேலைத் திருவீதியில்

அமைந்திருந்த திருவெல்லைக் காவலன் திருமடத்தில் பிக்ஷாமடம் சந்தானத்து நயினார் திருப்புனவாசல் முதலியார் பண்டாரத்துக்கு, கேரளாந்தகவளநாட்டில் தேனாற்றுப் போக்கில் அமைந்து கழனிவாசல் (கோவிலூர்) புரவில் அடங்கியிருந்த இலங்காட்டூர் என்னும் ஊரை மடப்புற இறையிலியாக சர்வமானியமாகக் கொடை அளிக்கப் பட்டுள்ளது.

பெத்தப்ப விசயாலய தேவரின் ஆட்சியின் கி.பி. 1559-ஆம் ஆண்டில் கொற்றவாளீசுவரர் கோயில் திருப்பணி செய்யப்பட்டதை ஒரு கல்வெட்டு கூறுகிறது. இத்திருப்பணியில் அரசருடன் மாத்தூர் மற்றும் இலுப்பைக்குடி நகரத்தாரும் இணைந்து பணியாற்றியுள்ளனர். இத்திருப்பணியின் போது கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், சோபான மண்டபம் ஆகியவை புனரமைக்கப்பட்டு மேல் தளங்களில் தட்டோடும் சாந்து, காரை கலவைகள் இட்டும் புனரமைக்கப் பட்டுள்ளது. மாத்தூர் என்பதற்கு வீரபாண்டியபுரம் என்று ஒரு பெயர் இருந்ததும் இக்கல்வெட்டின் மூலம் அறியப்படுகிறது.

மற்றுமொரு சிதைந்த கல்வெட்டு கி.பி.1787 ஆம் ஆண்டைச் சேர்ந்தது. இக்காலத்தில் சூரைக்குடி அரசின் தலைவராக இருந்த விசயாலய தேவரால் ஆனைமங்கலம் என்ற ஊர் மடப்புறமாக வழங்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. முற்கூறப் பட்ட பிட்சாமடச்சந்தானத்து திருப்புனவாசல் முதலியார்க்கே இம்மடப்புறம் வழங்கப்பட்டுள்ளது. கி.பி. 1863-ஆம் ஆண்டின் கல்வெட்டு ஒன்று கொற்றவாளீசர் கோயிலுக்கு மடப்புறமாக நிலம் கொடுக்கப்பட்டதையும், நெல் கொடையளிக்கப் பட்டதையும் கூறுகிறது- மற்றொரு ஆண்டுக்குறிப்பு சிதைந்த கல்வெட்டு ஒன்று சூரைக்குடி விசயாலய தேவரால் கொற்றவாளீசுவரர் கோயில் ஜீரணத் தோரணமாக இருந்ததைத் திருப்பணி செய்த செய்தியைத் தருகிறது.

மேற்கண்ட கல்வெட்டுகள்மூலம் கி.பி.1381 முதல் பத்தொன் பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி வரை இக்கோயிலில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகள், ஏற்படுத்தப்பட்ட மடங்கள் அவற்றினைப் பராமரிக்க வழங்கப்பட்ட கொடைகள் ஆகியவற்றை அறியமுடிகிறது. தற்போது உள்ள திருச்சுற்றுமதில் பிற்காலத்தில் அநேகமாக 19 -ஆம் நூற்றாண்டில் இவ்வட்டாரத்தில் வாழ்ந்த

நாட்டுக் கோட்டைச் செட்டியார் குடும்பங்களால் கட்டப் பட்டுள்ளது. குறிப்பாக மாத்தூர், இலுப்பைக்குடி கோயிலை வணங்குகின்ற செட்டியார்கள் பலரும் இதற்கான கொடையை வழங்கியிருக்கிறார்கள். திருச்சுற்றுமதிலின் வெளிச்சுவரில் ஒவ்வொரு கற்படையிலும் இவர்களின் ஊர், பெயர் விவரங்கள் கல்வெட்டுகளாக வெட்டப்பட்டுள்ளன.

இக்கோயிலின் பூசைப்பணியில் ஈடுபட்டிருந்த வீரப் பெரிய பெருமாள் நம்பியார் புத்திரன் வைத்தியநாதன் நம்பியாரின் சதா சேர்வை பற்றிய கல்வெட்டு நடராசர் சன்னதியின் வாயில் நிலையில்வெட்டப்பட்டுள்ளது. கழனிவாசலைத் தாயக்கிராமமாகக் கொண்ட பன்னிரண்டு ஊராரும், உஞ்சனையைத் தாயக்கிராம மாகக் கொண்ட 12 ஊரவரும் ஆக மொத்தம் 24 ஊரவர் சேர்ந்து இப்பூசாரியை நியமனம் செய்திருக்கிறார்கள்.

கொற்றவாளீசுவரர் சிவன் கோயிலை ஒட்டி வடக்குப் புறத்தில் கொற்றவாள் விநாயகர் கோயில் என்ற சிறிய கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலைக் கட்டியவரின் உருவச் சிற்பம் ஒன்றும் முன்மண்டபத் தூண் ஒன்றில் உள்ளது. அச்சிற்பத்தின் அடியில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு 'கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் கழனிவாசல் குடியான சிவராமன் செட்டிமகன் மெய்யப்பன்' என்ற பெயரைத் தருகிறது. இவரே இவ்விநாயகர் கோயிலைக் கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டில் கட்டியவர் எனக் கருதலாம்.

கட்டடக்கலை அமைப்பு:

கொற்றவாளீசுவரர் திருக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்த ஒரு கருவறையையும், அதற்கடுத்து அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக் கொண்டதாக உள்ளது. இதனைச்சுற்றி நான்கு புறமும் அகன்ற திருச்சுற்று அதன் ஓரங்களில் தூண்களுடன் நேர்த்தியாகக் கட்டப்பட்ட திருச்சுற்றுமாளிகை அமைந்து இக்கோயிலை ஓர் அமைதி தவழும் தெய்வீகச் சூழலைத் தருவதாக உள்ளன. திருச்சுற்று முற்றிலும் விதானங்களில் கல் பலகைகள் வேயப்பட்டு எப்போதும் இதமான உணர்வைத் தரும் வகையில் அமைந்துள்ளது.

கருவறை சதுரமான வடிவமைப்பில் மையத்தில் லிங்கம் சதுரபீடத்தின் மேல் ஸ்தாபிக்கப்பட்டுக் காட்சி அளிக்கிறது. மக்கள் இதனைச் சுயம்பு லிங்கம் என்று கருதுகின்றனர்.

கருவறைச் சுவர்கள் வழக்கம் போல் எவ்வித வேலைப்பாடும் இல்லாத நிலையில் அதன் மேல்விதானம் மரக்கட்டைகளால் வேயப்பட்டு அதற்கு மேல் விமானச் சிகரம், ஸ்தூபம் ஆகியவை செங்கல், சுண்ணாம்புகொண்டு கட்டப்பட்டுள்ளது. கருவறையின் வாயிலில் பக்கத்திற்கு ஒன்றாக தேவகோட்டம் போன்ற அமைப்பில் (போர்ட்டிகோ போன்று) சாலைவடிவம் காட்டப்பட்டுள்ளது சற்றுமாறுபட்ட அமைப்பாக உள்ளது. துவாரபாலகர்கள் இடம்பெறுவதற்குப் பதிலாக இத்தகைய அமைப்பு இங்குள்ளது வேறு எக்கோயிலிலும் இல்லாத மாறுபட்ட வடிவமாகும்.

கருவறையை அடுத்துள்ள அர்த்தமண்டபமும் தூண்கள் இல்லாத அறையாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. விதானம் நன்கு செதுக்கப்பட்டு சமப்படுத்தப்பட்ட கல் பலகைகளில் வேயப்பட்டுள்ளது. இரண்டு கல் உத்திரங்கள் மட்டும் கூரையைத் தாங்கும் வண்ணமும், அக்கல் உத்திரங்கள் சுவரோடு இணையும் இடங்களில் சிம்ம வேலைப்பாடும் காட்டப் பட்டுள்ளது. தற்போது இம்மண்டபத்தில் பூசனைப்பாத்திரங் களும், இறைவனுக்குச் சாத்தப்பட்ட ஆடைகளும் வைக்கப் பட்டுள்ளன. இம்மண்டபத்திற்கு இரண்டு கதவுகள் உள்ளன. இவ்வாயிற்கதவுகளில் ஒலி எழுப்பும் பல மணிகள் இணைக்கப் பட்டுள்ளன. நமது ஆய்வின் மூலம் இக்கோயிலின் கருவறையும், அர்த்தமண்டபமுமே தொடக்ககாலக் கட்டுமானம் (கிபி 13-14-ஆம் நூற்றாண்டு) என்றும், மகாமண்டபம் முதலான பிற கட்டடப்பகுதிகள் பிற்காலச் சேர்க்கை என்றும் அறியப்படுகிறது.

மகாமண்டபம் அர்த்தமண்டபத்தைவிட சற்றே பெரியது. இம்மண்டபம் இரண்டு வாசல்களைக் கொண்டுள்ளது. ஒன்று கிழக்கு நோக்கிய முக்கிய வாயில். மற்றொன்று தெற்கு நோக்கிய வாயில். இத்தெற்கு நோக்கியவாயில் முதலில் திருநெல்லியம்மன் கோயிலின் வாயிலாக இருந்திருக்க வேண்டும். பிற்காலத் திருப்பணியின் போது இவ்வம்மன் கருவறை மூடப்பட்டு அவ்விடத்தில் இன்று நடராசர் திருமேனி வைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது. கிழக்கு நோக்கிய திருவாயிலின் முன்புறமாக நந்தி, பலிபீடம், கொடிமரம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இம்முக்கியவாயிலின் இருபுறமும் துவாரபாலகர் சிற்பங்கள் நிற்கின்றன. மகாமண்டபத்தின் மத்தியில் சிறிய மேடையின் மீது செம்பால் ஆன நந்தியின்

உருவம் வைக்கப்பட்டுள்ளது. நந்தியின் பின்புறம் செம்பால் ஆன கண்ணாடி (சூரிய பிரபை) ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

இம்மகாமண்டபத்தின் ஒருபுறத்தில் இக்கோயிலுக்கு உரிய செப்புத் திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. சந்திரசேகரர், அஸ்திரதேவர், பவானி அம்மன் (உமையன்னை) விநாயகர், பஞ்சாட்சர நாயகி (எ) துர்கை, சம்பந்தர், அப்பர் சுந்தரர், பிறதோசநாயகர், வள்ளி தேவசேனாவுடன் முருகன், சண்டிகேசுவரர், நடமிடும் சம்பந்தர் ஆகிய செப்புத் திருமேனிகள் இங்கு இடம்பெற்றுள்ளன.

நடராசரின் செப்புத்திருமேனி சிவகாமி அம்மையுடன் மகாமண்டபத்தின் வடபுறம் உள்ள சிறிய அறையில் (முன்பு அம்மன் சன்னதி) வைக்கப்பட்டுள்ளது. அதன் அருகிலேயே மணிவாசகப் பெருமானின் செப்புத் திருமேனியும் இடம்பெறுகிறது.

கட்டடக்கலையின் வெளிப்புறத் தோற்றம்:

கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஆகிய அங்கங்கள் நன்கு செதுக்கப்பட்ட கற்பாறைகளால் அமைக்கப்பட்டுள்ளன. கருவறை விமானம் அதிஸ்டானம் முதல்பிரஸ்தரம் (கூரை) வரை கருங்கல் பணியாகவும், அதற்கு மேல் உள்ள கிரீவம், சிகரம், ஸ்தூபம் ஆகியவை செங்கல் சுண்ணாம்புக்கட்டுமானங்களாகவும் உள்ளன. திருச்சுற்று மாளிகை, திருச்சுற்றுச் சாலை (பிரகாரம்) ஆகியவை பலகைக் கற்களால் மூடப்பட்டுள்ளதோடு அவை கருவறையின் பிரஸ்தரப்பகுதியோடும் கற்களால் இணைக்கப்பட்டுள்ளன. இக்கற்களுக்கு இடையே ஆங்காங்கே விடப்பட்டுள்ள இடைவெளியின் காரணமாகப் போதிய சூரிய வெளிச்சம் கோயிலுக்குள் வரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால் கோயிலில் எப்போதும் இதமான வெப்பமும், காற்றும் கிடைக்கின்றன.

கோயிலின் விமானம் சட்அங்கம் என்னும் வடிவில் அதாவது ஆறு அங்கங்களுடன் அமைந்துள்ளது. அதிஸ்டானம், பித்தி (சுவர்) பிரஸ்தரம் (கூரை) கிரீவம், சிகரம், ஸ்தூபம் என்னும் ஆறு அங்கங்களைக் கொண்டது இவ்விமானம். அதிஸ்டானப் பகுதிகள் மூன்று சம பாகங்களாகப் பிரிக்கப்பட்டு பத்திபிரிப்பு என்னும் அடிப்படையில்

சிற்றங்கங்களை மாற்றி மாற்றி வர்க வேறுபாட்டுடன் கட்டப்பட்டுள்ளது. நடுவில் உள்ள பகுதி மட்டும் தேவகோட்டத்திற்குரியதாக வைத்து அதனைப் பிதுக்கம் என்று சொல்லும் வகையில் சற்றே முன்னெடுத்துக் கட்டப்பட்டுள்ளது.

அதிஸ்டானப் பகுதி (தாங்குதளம்) உபானம், உபபீடம், பத்ம ஜகதி, கம்பு, குமுதம், பட்டிகை என்ற சிற்றங்கங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வங்கங்களும் வர்க்கபேதம் காட்டும் வகையில் உள்ளன. எடுத்துக்காட்டாக ஜகதி என்னும் சிற்றங்கம் குறிப்பிட்ட இடைவெளிகளில் பத்மஜகதி, கபோதபந்த ஜகதி, இவை எதுவுமற்ற கல்படை (ஜகதி) என மூன்று வேறுபட்ட வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இதே போல குமுதவரியும் முப்பட்டை குமுதம், 16 பட்டைக் குமுதம் விருத்த குமுதம் என மாறுபட்ட வடிவங்களில் அமைக்கப் பட்டுள்ளன. இவ்வாறு அமைக்கப்படுவதையே வர்க பேதக் கட்டுமானம் என்பர். இத்தகைய அமைப்புகள் விஜயநகர அரசர், நாயக்கர் காலத்தில் பலராலும் பின்பற்றப்பட்டவை. இக்கோயில் சூரக்குடி விசயாலயத் தேவர் காலத்தில் கி.பி.16 ஆம் நூற்றாண்டில் விரிவுபடுத்திக்கட்டப்பட்டபோது இந்நிலையில் கட்டப் பட்டுள்ளது.

கருவறையின் சுவர்கள் அரைத்தூண்கள், தேவகோட்டம், கும்பபஞ்சரம் என்னும் அங்கங்களால் அழகூட்டப்பட்டுள்ளன. அரைத்தூண் அமைப்புகள் நன்குவளர்ச்சி பெற்ற நாகபந்தம், எண்பட்டைத்தடி, தாமவரி, வீரகண்டம், அமலகம், அதோபத்மம், பலகை ஆகிய உறுப்புகளுடன் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. பலகைக்கு மேலாக பூமுனைப் போதிகைகளும், அதற்கு மேல் உத்திரம், எழுதகம் என்னும் கல்படைகளும் உள்ளன. கும்ப பஞ்சரம் என்னும் அமைப்பும் கீழே பானை வடிவ அமைப்புடன், கொடி வேலைப்பாடுகளுடனும், மேலே சாலை வடிவக்கட்டு மானத்துடனும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தேவ கோட்டங்களில் திசைக்கொன்றாக அவ்வத் திசைக்குரிய தெய்வ உருவங்களை வைப்பது பல்லவர், சோழர் கலைக்கோயில்களில் காணப்படும் மரபு. தென்புறம் தட்சிணா மூர்த்தியும், மேற்கில் திருமாலும், வடக்கில் நான்முகனும் வைக்கப்படுவர். ஆனால் பாண்டிய நாட்டுக் கலைப்பாணியில் இம்மரபு பின்பற்றப்படுவதில்லை. கோட்டங்கள் பொய்க் கோட்டங்களாகச் சிற்பங்கள் இல்லாமல் அமைக்கப்படுவதே

மரபு. அதே மரபு இக்கோயிலிலும் பின்பற்றப்பட்டுள்ளது. நல்ல உயரமான கோட்டங்கள் இறை உருவங்கள் இல்லாமல் கட்டப்பட்டுள்ளன. ஆனால் பிற்காலத் திருப்பணியின்போது அவ்வத்திசைக்குரிய இறை உருவங்கள் சிறிய அளவில் செய்து வைக்கப்பட்டுள்ளன. எனவே அவை தேவ கோட்டங்களோடு பொருந்தவில்லை.

தேவ கோட்டங்களின் மேல் பகுதியில் பொதுவாக மகர தோரணம் என்னும் வேலைப்பாடு காட்டப்பட்டிருக்கும். ஆனால் இக்கோயிலில் அதற்கு மாறாக சாலை வடிவ விமானம் காட்டப்பட்டுள்ளது. இதுவும் ஒரு பிற்காலச் சேர்க்கையே என்று கருதலாம்.

பிரணாளம், வழிபாட்டு நீர் வெளியேறுவதற்கு வசதியாக வடபுற அதிட்டான ஜகதி நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இது யாளிமுக அமைப்பிலும் பின் நீண்ட மூக்கு போன்ற கால்வாயுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தரம் என்னும் கூரைப்பகுதி பூதவரி, கபோதம், யாளிவரி என்னும் மூன்று அங்கங்களுடன் அமைக்கப்படுவதுண்டு. ஆனால் இங்கு பூதவரி, யாளிவரி இல்லாமல் கபோதம் என்னும் வளைந்த கொடுங்கை மட்டும் கொண்டு கட்டப்பட்டுள்ளது.

கபோதம் என்றால் புறா என்னும் பொருள் உண்டு. இப்பகுதி புறாக்கள் தங்குவதற்கு ஏற்ற இடைவெளிகளுடன், மரச்சட்டங்களுடன் (ரீப்பர்) அமைப்பர். அதுவே இங்கு கல்லாக மாற்றப்பட்டுள்ளது. வளைந்த கொடுங்கை மழைநீரைச் சற்று வெளியே தள்ளி வெளியேற்றுவதற்கு ஏற்ப அமைக்கப்படுவதாகும். கபோதவரியின் மேலாகக் குறிப்பிட்ட இடைவெளிகளில் கூடு என்னும் ஒருவகை அலங்கார அமைப்புகள் செதுக்கப்பட்டுள்ளன. இங்கு அத்தகைய கூடு அமைப்புகளின் நடுவில் சாலைவடிவ அலங்கார வடிவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே பிறபாண்டியர் கலைப்பாணியை முற்றிலும் அடியொற்றிக் கட்டப்பட்ட இக்கோயில் 16-17-ஆம் நூற்றாண்டுகளில் புதுப்பிக்கப்பட்ட போது சில மாற்றங்களும் இணைந்தன எனலாம்.

திருநெல்லி அம்மன் ஆலயம் மிகவும் பிற்காலத்திய கட்டுமானம் ஆகும். முன்பு சிவன் சன்னதியின் வடக்கில் இணைந்திருந்த

அம்மன் சன்னதியை மூடிவிட்டுப் புதிதாகத் தற்போதுள்ள சன்னதி கட்டப்பட்டுள்ளது. சிவன், நெல்லியம்மன் சன்னதிகளுக்கு இடையில் புதிதாக நித்யகல்யாணி, கைலாசநாதர், சோமாஸ்கந்தர் ஆகியோருக்குத் தனித்தனியே சிற்றாலயங்கள் கட்டப்பட்டுள்ளன. இவையாவும் 19 - 20-ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டவையாகும். இச்சிற்றாலயங்களை வரிசைப்படுத்தி இணைக்கும் விதமாக முன்புறம் ஒரு நீண்ட யாழி மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபம் மதுரை ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ள யாழிமண்டபத்தை ஒத்த அழகுடையது. இக்கோயிலின் பிரம்மாண்டபத்தை வெளிப்படுத்தும் வகையில் இம்மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இத்தகைய விரிந்த யாழி மண்டபங்களைக் கூட்டுத் தூண்டுகளுடன் அமைக்கும் வழக்கம் நாயக்கர் காலத்தில் மிகுதியாயிருந்தது. ஒருபுறம் தூணின் சிற்றங்கங்கள் அழகுடன் திகழ முன்புறம் செம்மாந்தயாழிகள் வரிசையாக நிற்கும் வகையில் இத்தூண்கள் அமைக்கப்படும். யாழி என்பது சிம்மமும் புலியும் இணைந்த அல்லது சிம்மமும் யானையும் இணைந்த ஒரு புராணகாலக் கற்பனை விலங்காகும். அவற்றைப் பெருமளவில் கோயில்களிலும், அரண்மனைகளிலும், மண்டபங்களிலும் அமைப்பது நாயக்கர் கலைப்பாணிக்குரியது. நாயக்க மன்னர்கள் தம் வீரத்தையும் பேராற்றலையும் வெளிப்படுத்தும் ஓர் அடையாளமாக யாழிவடிவங்களைக் கொண்டனர். அத்தகைய யாழிகளையுடைய இக்கோயில் மண்டபம் இரண்டு வரிசைகளில் வரிசைக்கு ஏழு தூண்களுடன் மொத்தம் 14 தூண்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இத்தூண்களின் இடைக்கட்டுப் பலகைகளில் பல சிற்றுருவச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டு தூண்களில் திருப்பணி செய்த செட்டியார்களின் உருவச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

• தெற்குப்பக்கம் உள்ள திருச்சுற்று மாளிகைச் சுவரில் 63 நாயன்மார்களின் உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டு அவற்றின் கீழ் அவர்களின் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன.

இக்கோயிலின் கிழக்குப்புறம் மூன்று கோபுரமும் தெற்குப்புறம் ஒரு கோபுரமுமாக மொத்தம் நான்கு கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. கொற்றவாளீசர் சன்னதிக்கு நேர் எதிரில் கட்டப்பட்டுள்ளதே உயரமானதும் முக்கியமானதுமான

கோபுரம் ஆகும். பிரஸ்தரம் வரைகல்காரமாகவும் அதற்குமேல் ஐந்து நிலைகளைக் கொண்ட சுதைக் கட்டுமானத்தையும் கொண்ட இக்கோபுரம் ஐந்து கலசங்களையும் கொண்டுள்ளது. ஐந்து நிலை வாயில்களிலும் தூவாரபாலகர் சிற்பங்களும் மற்ற சில சுதைச் சிற்பங்களும் வைக்கப்பட்டுள்ளன. கோபுரச்சிகரம் சாலை வடிவில் அமைந்துள்ளது.

இரண்டாம் கோபுரம் கைலாசநாதர் சன்னதிக்கு எதிராக சிறிய அளவில் கட்டப்பட்டுள்ளது. மூன்று தளங்களையும் அவற்றிற்கு ஏற்ப மூன்று கலசங்களையும் கொண்டுள்ளது இக்கோபுரம். இக்கோபுரவாயில் எப்போதும் பூட்டப்பட்டே இருக்கும்.

அடுத்து திருநெல்லி அம்மன் சன்னதிக்கு எதிராகக் கட்டப்பட்டுள்ளது ஐந்து நிலைக் கோபுரமாகும். சுவாமி சன்னதி கோபுரத்தைவிடச் சற்றே உயரம் குறைந்த இக்கோபுரமும் ஐந்து கலசங்களைக் கொண்ட சாலைவடிவ சிகரமாக உள்ளது.

தென்பகுதியில், உள்ள கோபுரம் நடராசர் சன்னதிக்கு எதிராக அமைந்துள்ள ஐந்து நிலைக் கோபுரமாகும். இக் கோபுரத்தின் முன்பாக ஒரு திறந்தவெளி மண்டபம் (Portico) 16 கால்களுடன் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் விதானத்தில் 12 ராசி மண்டலமும், கஜலட்சுமி முதலான பல கடவுளர் உருவங்களும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

கோபுர வாயில் நிலைத்தூண்களில் இருபுறமும் கங்கை, யமுனை என்னும் நீர்த்தெய்வங்களின் வடிவங்கள் கொடிப் பெண்களாகச் செதுக்கப்பட்டுள்ளனர். இவ்வுருவங்களின் மேல் வளைந்து செல்லும் கொடி வேலைப்பாடுகளும் அவற்றின் நடுவே அன்னம் போன்ற பறவைகளின் உருவங்களும் செதுக்கப் பட்டுள்ளன.

கோயிலை ஒட்டி வடகிழக்கு மூலையில் ஒருவிநாயகர் கோயில் அண்மைக்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. ஒரு சிறு கருவறையும் வெளிமண்டபமும் கொண்ட இக்கோயில் கொற்றவாள் விநாயகர் கோயில் என்ற பெயருடன் விளங்குகிறது. இதைக்கட்டிய செட்டியாரின் உருவமும், அவரது பெயரும் ஒரு தூணில் செதுக்கப்பட்டுள்ளன. கழனிவாசல் சிவராமன் செட்டியார் மகன் மெய்யப்பன் என இவரை அறிகிறோம்.

நீராழி மண்டபம்: கொற்றவாளீசுவரர் கோயிலை மேலும் மெருகூட்டுவது முன்புறமாக அமைந்துள்ள நீராழி மண்டபம். நடுவில் மையமண்டபத்துடன் கூடிய அருமையான தெப்பக்குளம் நாற்புறமும் படித்துறைகள் கொண்டிலங்குகிறது. பொதுவாக அனைத்துச் சிவன் கோயிலிலும் இருக்கும் சிவகங்கை என்னும் குளமே இது. இங்குள்ளஇக்குளம் திருவாரூர், வண்டியூர், சின்னமனூர் போன்ற இடங்களில் உள்ள நீராழி மையமண்டபங் களுக்கு இணையான வனப்புடையது. இது எப்போதும் நீர் நிறைந்துள்ள இத்தெப்பக் குளத்தோடு அமைந்துள்ள தெய்வீகச் சூழல் இவ்வூருக்கே உரியது என்றால் அது மிகையில்லை.

கலைச் செல்வங்கள்:

தமிழகக் கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி கலைச் செல்வங்களின் கருவூலமாகவும் திகழ்பவை ஒவ்வொரு கோயிலும் கலை நயமிக்க செப்புத்திருமேனிகளையும், கல்லைப் பிசைந்து கனியாக்கிய சிற்பங்களையும் கொண்டிலங்குபவை. குறிப்பாகச் செப்புத் திருமேனிகள் கனமான திருமேனிகளாகச் செய்யப்படுபவை. வெளிநாட்டுக் கலை ஆர்வலரும், கலை வல்லாரும் விரும்பிக்கண்டு களிப்பவை இத்தகைய செப்புத் திருமேனிகளையே. இங்கு மொத்தம் 20 செப்புத்திருமேனிகள் இடம்பெற்றுள்ளன. கற்சிற்பங்களுக்கும் குறைவில்லை.

முதலில் குறிப்பிட வேண்டிய செப்புத்திருமேனி சந்திர சேகரர் ஆகும். சிவபெருமானின் இருபத்தைந்து விதமான திரு உருக்களில் முதன்மையானது இது. தலையில் பிறைச்சந்திரனைக் கொண்டு ஜடாமகுடத்துடன் நான்கு கரங்கள் பெற்றுத் திகழும் இத்திருமேனி சமபங்கமாக பத்ரபீடத்தில் நிற்கிறது. வல, இடக்காதுகளில் மகர குண்டலமும் பத்ர குண்டலமும் முறையே துவங்க மூன்று விதமான கழுத்தணிகள் அழகூட்ட மார்பில் புரிநூலும், இடையில் உதரபந்தமும் தோள்களில் வாகுமாலையும், கேயூரமும் அணி சேர்க்க காட்சி அளிக்கிறார் சந்திரசேகரர். நான்கு கரங்களில் மேலிருகரங்கள் மழுவும் மானும் கொண்டிருக்கக் கீழ்வலக்கரம் அபய முத்திரை காட்ட கீழ் வலக்கரம் வரதமுத் திரையுடன் திகழ்கிறது இத்திருமேனி. சுமார் 2½ அடி உயரமுள்ள இத்திருமேனி கி.பி. 17- 18-ஆம் நூற்றாண்டளவில் செய்யப் பட்டிருக்கக் கூடும்.

உமையன்னையின் திருமேனி ஒன்று கோயில் பூசாரிகளால் பார்வதி, சுக்கிரவார அம்மன், பவானி அம்மன் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இத்திருமேனி ஒரு சதுரமான பத்ரபீடத்தில் சமபங்க நிலையில் நிற்கிறது. இரண்டு கரங்கள் மட்டுமே கொண்டுள்ள இத்திருமேனி கரண்ட மகுடம் தாங்கி, இருகாதுகளிலும் பத்ர குண்டலங்கள் துலங்க எளிமையான அணிகலன்களுடன் உள்ளது. இருகரங்களில் வலக்கரம் கடக ஹஸ்தமாகவும் இடக்கரம் தொங்கும் கரமாகவும் (டோல ஹஸ்தம்) உள்ள இத் திருமேனி கி.பி. 18-ஆம் நூற்றாண்டினதாகலாம்.

விநாயகர்: வலம்புரி விநாயகராயுள்ள இத்திருமேனி நின்ற நிலையில் கரண்ட மகுடத்துடன் நான்கு கரங்கள் கொண்டு விளங்குகிறது. மேலிருகரங்களில் அங்குசம், பாசம் திகழ கீழ் வலக்கரம் ஒடிந்த கொம்பும் கீழ் இடக்கரம் மோதகமும் கொண்டுள்ளன.

காளி- அய்யுளி அம்மன்: இன்று பக்தர்களாலும் கோயில் பணியாளர்களாலும் அய்யுளி அம்மன் என்று வழங்கப்படும் இத் திருஉரு காளியின் வடிவம் ஆகும். அய்யாபொழில் பரமேஸ்வரி என்னும் பெயரே மருவி சுருங்கி அய்யுளி அம்மன் என ஆயிற்று. வணிகர் குழுவினர் வணங்கும் தெய்வமே அய்யப் பொழில் பரமேசுவரி. இக்கோயிலும் நாட்டுக் கோட்டை நகரத்தார் என்னும் வணிக இனமக்களின் வழிபாட்டில் இருப்பதால் இத்திருமேனி இங்கு இடம் பெற்றுள்ளதில் வியப்பில்லை. மேலும் கொற்றவாளீசுவரர் என்னும் இறைவன் பெயர் கூட வணிகர் குழுவினருடன் வந்த காவல் வீரர்களின் கை வாளின் அடிப்படையில் வந்த பெயராகக் கருதுவதும் தவறில்லை- இவ்வம்மன் பத்ர பீடத்தின் மேல் வைத்த பத்ம பீடத்தில் சுகாசனத்தில் அமர்ந்துள்ளாள். அவளது வலக்காதில் பிரேத குண்டலமும் இடக்காதில் ஓலைக்குண்டலமும் அணி செய்கின்றன. மூன்று வகை பொன் ஆரங்கள் கழுத்தை அலங்கரிக்க மண்டை ஓடுகள் கோத்த புரிநூல் மார்பில் காணப்படுகிறது. மார்ப்புக்கச்சையும், தொடைவரையான அரைஆடையும் காட்டப்பட்டுள்ளன. கால்களில் வீரக்கழலும், சிலம்பும் எழில் சேர்க்கின்றன. நான்கு கரங்களில் மேலிரு கரங்கள் திரிசூலமும் பாசமும் தாங்க, முன்வலக்கை காக்கும் கரமாகவும் முன் இடக்கை கபாலம் ஏந்தியும் உள்ள இவ்

அன்னையின் வடிவம் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டின் கலைப் படைப்பாகும்.

ஞானசம்பந்தர்: தேவார மூவரில் முதல்வரான ஞானசம்பந்தரின் திருமேனி மழித்த தலையுடன் அதில் உருத்திராக்கமாலை சுற்றிக்கட்டப்பட்ட நிலையில் தொங்கும் காதுகளுடன் நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. இரண்டு கரங்களில் வலக்கரம் சூசி முத்திரை காட்ட இடக்கரம் பொற்றாளம் ஏந்திய நிலையில் உள்ளது.

திருநாவுக்கரசர்: இத் திருமேனியும் முற்றிலும் மழிக்கப்பட்ட தலையில் ருத்திராக்க மாலை திகழ அஞ்சலி முத்திரையில் நிற்கிறது. இடது மார்பில் உழவாரம் என்னும் படை சாய்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது.

சுந்தரர்: இவரே கிரீடமகுடம் தாங்கி பத்மபீடத்தில் நிற்கிறார். வலக்கையில் நீலோத்பல மலரும் இடக்கை கட்யவலம்பிதம் நிலையிலும் உள்ளது.

மாணிக்கவாசகர்: முழுதும் மழித்ததலையுடன் பத்மபீடத்தில் நின்ற நிலையில் உள்ள திருமேனி இரண்டு கரங்களுடன் காணப்படுகிறது. வலக்கரம் சின் முத்திரை (வியாக்யானம்) காட்ட இடக் கரத்தில் ஓலைச்சுவடி ஒன்று உள்ளது. இத் திருமேனியும் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டளவில் வார்க்கப்பட்டதாகலாம்.

நடமிடும் சம்பந்தர்: இச்செப்புத் திருமேனி ஒரு அடி உயரமே உள்ளது. பீடத்தின் மீது வலக்காலை நன்கு ஊன்றி இடக்காலைத் தூக்கி நடனமாடும் நிலையில் இத்திருமேனி அமைந்துள்ளது. வலக்கரம் சூசி முத்திரை காட்ட .இடக்கரம் வளைந்த இடக் காலுக்கு இணையாக வளைந்துள்ளது.

சண்டிகேசுவரர்: சிவபெருமானின் ஆதிதாசனாக, முதல் அடியவராகக் கருதப்படும் சண்டிசேசுவரரே சிவன் கோயில் களின் சொத்துப்பாதுகாப்பாளர் எனக் கருதப்படுகிறார். இங்குள்ள இத்திருமேனி ஒரு அடி உயரத்தில் சமபங்கமாக கிரீடமகுடம் தாங்கியுள்ளது. நான்கு கரங்களுடன் திகழும் இத்திருஉரு மேலிருகரங்களில் மழுவும் பாசமும் கொண்டிலங்கக் கீழிரு கரங்களில் அபய, வரத முத்திரைகளுடன் காட்சி தருகிறது.

பிரதோசநாயகர் (சிவன்) உமையுடன் இணைந்து நிற்கும் சிவபெருமானையே மக்கள் பிரதோச நாயகர் என்கின்றனர். உமா மகேசுவரர் எனலும் பொருந்தும். இருஉருவங்களும் ஒரே பீடத்தில் நிறுத்தப்பட்டு ஒரே பிரபைமண்டலம் அமைக்கப் பட்டுள்ளது. சடை மகுடம் தாங்கிய சிவன் வலக்காதில் சிம்ம குண்டலமும், இடக்காதில் பத்ரகுண்டலமும் அணிந்து நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறார். மேலிரு கரங்களில் மழுவும் மானும் அணிசெய்யக் கீழ் வலக்கரம் அபய முத்திரையுடனும் இடக்கரம் கடகமுத்திரையுடனும் காணப்படுகிறது.

அருகில் இடதுபுறம் நிற்கும் உமை அம்மை இருகரங்களே பெற்றுள்ளாள். கரண்டமகுடம் சிரத்தை அலங்கரிக்க, வலக்கரம் நீலோத்பலம் ஏந்த, இடக்கரம் டோலஹஸ்தமாகக் காட்டப்பட்டுள்ளாள். இவ்விரு திருமேனிகளும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் கலைப்படைப்பே.

முருகன்: முருகன், தேவசேனை, வள்ளியுடன் உள்ளார். முருகனின் சிரத்தில் கரண்ட மகுடம், காதுகளில் மகரகுண்டலம், மார்பில் சன்னவீரம் என்னும் வீரச்சங்கிலியுடன் எழில் கோலத்துடன் உள்ளார். நான்கு கரங்களில் மேலிரு கரங்கள் சக்தியும் வஜ்ராயுதமும் துலங்க, கீழிருகரங்கள் அபயமும், வரதமும் காட்டும் நிலையில் உள்ளன.

தேவசேனை: முருகனின் வலப்புறம் நிற்கும் தேவசேனா கரண்ட மகுடம் தாங்கி வலக்கரத்தில் தாமரை மலர் ஏந்தி இடக்கரம் தொங்கும் கரமாகக் காட்டப்பட்ட நிலையில் வடிக்கப்பட்டுள்ளாள்.

வள்ளி: முருகனின் இடப்புறம் அதே கரண்ட மகுடத்துடன் வலக்கரம் நீலோத்பலம் தரிக்க, இடக்கரம் டோலஹஸ்தமாகக் காட்டப்பட்டுள்ளாள். இம்மூன்று திருமேனிகளும் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டின் கலைவடிவங்களாகும்.

நடராசர்: வார்ப்புக்கலையின் உன்னத வெளிப்பாடே நடராசர் திரு உருவம்.. ஆனந்த தாண்டவரான அவரின் அழகில் மயங்காத கலை ஆர்வலர்களே இல்லை.

இக்கோயிலில் இடம் பெற்றுள்ள இத்திருமேனி அறியாமையின் மொத்த உருவமாகக் கருதப்படும் முயலகன் வீழ்ந்துகிடக்க அவன் முதுகின் மேல் வலக்காலை ஊன்றி இடக்காலைத் தூக்கி ஆனந்த நடனமிடும் நிலையில்

வடிக்கப்பட்டுள்ளது. ஜடாமகுடம் தலையை அலங்கரிக்கக் காதுகளில் மகர, பத்ர குண்டலங்கள் அணிசெய்ய வலக் கரத்தில் பாம்பு ஒன்று சுற்றியுள்ளது. கனமான கழுத்துப்பட்டை (Necklace), ஒற்றைச்சரப் பொன் ஆரம் கழுத்தை அலங்கரிக்கின்றன. நான்கு கரங்களில் மேல்வலக்கரம் உடுக்கை கொண்டு ஒலி எழுப்ப மேல் இடக்கரம் அனல் ஏந்தியுள்ளது. கீழ் வலக்கரம் காக்கும் கரமாகவும், கீழ் இடக்கரம் வேழ முத்திரை கொண்டும் உள்ளது. பத்ர பீடத்தில் மேல் கவிழ்ந்த பத்ம பீடத்தில் நிற்கும் இத்திருமேனி கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டின் கலைப் படைப்பாக இருக்கலாம்.

சிவகாமி: வியக்கவைக்கும் ஆனந்த நடனத்தை அருகிருந்து கண்டுகளிக்கும் வகையில் அருகிலேயே வைக்கப்பட்டுள்ளது இவ்வம்மையின் திருமேனி. கரண்ட மகுடமும் கடக ஹஸ்தமும், டோலஹஸ்தமுமாக பத்ரபீடம் சுமந்த பத்மபீடத்தில், நிற்கும் இத்திருமேனியும் 13-14-ஆம் நூற்றாண்டின் கலை வண்ணமே.

சோமாஸ்கந்தர்: சிவனும் உமையும் அருகருகே அமர்ந்திருக்க இருவருக்கும் இடையில் குறும்பு கூடிய முருகன் நிற்கும் குடும்ப ஓவியமே சோமாஸ்கந்தர் என்னும் கலை வடிவமாகும். சிவபெருமான் கிடக்காலை மடித்து வலக்காலைத் தொங்கவிட்ட சுகாசன நிலையில் அமர்ந்துள்ளார். அவரின் இடப்புறம் உமையன்னை அதே சுகாசனத்தில் இருவருக்கும் இடையில் கந்தன் நிற்கிறான். இம்மூன்று உருவங்களும் கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டில் வார்க்கப்பட்டவையாகலாம்.

கல்திருமேனிகள்: இக்கோயிலின் எழிலுக்கு மேலும் எழில் கூட்டும் வகையில் அமைந்துள்ளவை கற்சிற்பங்கள் திருநெல்லையம்மன் சன்னதிக்கு எதிரில் வரிசைக்கு ஐந்தாக இரண்டு வரிசைத்தூண்களில் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் கிழை நுழைவாயிலில் அமைந்துள்ள அஷ்ட சக்தி மண்டபத்தைப் போல இச்சிற்பங்கள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. இச் சிற்பங்கள்யாவும் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ அல்லது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இடப்புறம் அம்மன் திருஉருவங்களும், வலப்புறம் சிவபெருமானின் வெவ்வேறு திருக்கோலங்களும் சிற்ப வடிவங்களாயுள்ளன.

வலப்புறம் உள்ள சிவமூர்த்தங்களில் காலசம்ஹாரர், கங்காளர், வீரபத்ரர், ஊர்த்துவதாண்டவர், ரிசப ஆரூடர்,

முருகன், செட்டியார் திருஉருவம் ஆகியவை அமைக்கப் பட்டுள்ளன. இடப்புறமுள்ள அன்னை வடிவங்களாக சரஸ்வதி, சாரதா தேவி, மீனாக்ஷி, தில்லைக்காளி, மீனாட்சி சுந்தரேஸ் வரரின் மணக்கோலம் வல்லபகணபதி ஆகியவை இடம் பெற்றுள்ளன. இம்மண்டபத்திலேயே கோவிலூர் ஆதீனகர்த்தரான முத்து ராமலிங்கர் சாஸ்டாங்க வணக்கமாக குனிந்து வணங்கும் நிலையில் ஒரு சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது.

காலசம்ஹாரர்: காலனை வதம் செய்த சிவபெருமானின் வடிவம் நான்கடி உயரமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அதிபங்க வடிவில் உள்ள சிவபெருமான் வலது காலை உயர்த்தி யமனை உதைக்க அவன் அவரது காலடியில் வீழ்ந்து கிடக்கிறான். மல்லாந்து கிடக்கும் யமனின் வலக்கரம் தண்டத்தைப் பற்றி இருக்க வலக்கரத்தில் உள்ள பாசக்கயிறு சிவனைப் பூசிக்கும் மார்க்கண்டேயன் உடலோடு பிணைந்துள்ளது. ஒரு நாடகக் காட்சி போல் உள்ள இவ்வுருவம் கிரீடமகுடம் மகர பத்ர குண்டலங்கள், கோரைப்பற்கள், அரை ஆடை வீரக்கழல் கொண்டு விளங்குகிறது. நான்கு கரங்களில் மேலிரு கரங்களில் மழு, மான் திகழ கீழ்வலக்கரம் திரிசூலமும் இடக்கரம் கபாலமும் கொண்டுவிளங்குகிறது. இங்குள்ள சிவபெருமான் கற்சிற்பங்கள் அனைத்திலும் சடாமகுடம் காட்டுவதற்கு மாறாகக் கிரீடமகுடம் காட்டியிருப்பது ஒரு பிழையான அம்சமாகவே கருதப்பட வேண்டும்.

கங்காள மூர்த்தி: சிவபெருமான் தாருகாவனத்து ரிஷி பத்தினிகளிடம் பிச்சை ஏற்கச் செல்லும் கோலமே இது. எட்டுக் கரங்களுடன் அதிபங்கமாகச் செதுக்கப்பட்டுள்ளது இவ்வடிவம். வலக்காலை முன்வைத்து இடக்காலைப் பின்வைத்து நடை பயிலும் விதத்தில் அமைந்துள்ளது. கால்களில் செருப்பு காட்டப்பட்டுள்ளது. எட்டு கரங்களில் நான்கு வலக்கரங்கள் மழு, கத்தி, அக்கமாலை, எலும்பு (கங்காளம்) ஆகியவையும் கொண்டிலங்க இடக்கரங்கள் நான்கும் மான், உடுக்கை, குறுவாள், வீணை தரித்துள்ளன.

வீரபத்திரர்: எட்டு கரங்கள் கொண்ட உருவம் வலக்கரங்களில் மழு, அம்பு, உடுக்கை, வாள் ஆகியவற்றையும், இடக்கரங்களில் கபாலம், வில், கேடயம், வெட்டப்பட்ட தலை ஆகியவற்றையும் தாங்கியுள்ள நிலையில் வடிக்கப்பட்டுள்ளது.

ஊர்த்துவதாண்டவர்: பத்து கரங்கள் கொண்ட இவ்வுருவம் இடக்காலை முயலகன் மீது ஊன்றி வலக்காலை தலைவரைத் தூக்கிய நிலையில் உள்ளது. வலப்புறத்தில் காரைக்கால் அம்மையார் நிற்க இடப்புறத்தில் நந்தி தேவர் நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில், முன்னிரு கரங்களால் பஞ்ச முகவாத்தியத்தை வாசிக்க, மேலிருகரங்களைத் தலைக்குமேலாகத் தூக்கி அஞ்சலித்த நிலையில் உள்ளார். சிவபெருமானின் பத்து கரங்களும் உடுக்கை, அனல், மழு, மான், கத்தி, கேடயம், திரிசூலம் நந்திதம்பம், அபயம், வேழ ஹஸ்தம் கொண்டு விளங்குகின்றன.

ஐந்தாவது தூணின் தெற்குப்பார்த்து ரிசபாரூடர் உருவம் இடம் பெற்றுள்ளது. நின்றுள்ள ரிசபத்தின் மீது சிவனும், பார்வதியும் சுகாசனத்தில் அமர்ந்துள்ளனர்.

எதிர்வரிசையில் உள்ள தூண்களில் அம்மனின்பல்வகை வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு,

சரஸ்வதி: நின்ற நிலையில் அதிபங்கத்துடன் ஆறுகரங்கள் கொண்டிருக்கும் சிற்பம். முழுமையான கனமான ஆடை, கனமாக மிகுதியான அணிகலன்கள் இடம் பெற்றுள்ளன. வலப்புறம் உள்ளமூன்று கரங்கள் தாமரை, அல்லி, மலர் மாலை தாங்கியுள்ளன. இடக் கரங்களில் கலசம், மணி, வீணை ஆகியவை காணப்படுகின்றன.

சாரதாதேவி: பெரும்பாலும் சாரதாதேவி என்றொரு வடிவம் சிவன்கோயில்களில் இடம்பெறுவதில்லை. இங்குள்ளது காளியின் வடிவமே. இதனை மக்கள் சாரதாதேவி என்று பெயரிட்டு அழைக்கின்றனர். திரிபங்கியாக ஆறுகரங்களுடன் நிற்கும் இத்திரு உரு வலக்கரங்களில் பாசம், சக்கரம், மலர் கொண்டும் இடக்கரங்களில் கலசம், கத்தி, மலர் கொண்டும் உள்ளது.

மீனாட்சி அம்மன்: கரண்ட மகுடத்துடன், மார்புக்கச்சை அணிந்து, முழு ஆடை உடுத்தி ஆறு கரங்கள் கொண்டு நிற்கிறாள் அன்னை மீனாட்சி. வலக்கரங்களில் ஈட்டி, வாள்; அம்பு ஆகியவை இருக்க இடக்கரங்கள் அரவம், கேடயம், வில் தாங்கி நிற்கிறாள்.

தில்லைக்காளி: அதிபங்கத்துடன்; அனல் மகுடம் தாங்கி எண் கரங்கள் கொண்டு விளங்குகிறாள் இவ்வம்மை, வலக்கரங்களில் அம்பு, சக்கரம், கத்தி, திரிசூலம் இருக்க, இடக்கரங்களில் வில், பாசம், கேடயம், கபாலம் ஏந்தியுள்ளாள்.

மீனாட்சி மணக்கோலம்: மதுரை கம்பத்தடி மண்டபத்தில் உள்ளது போலவே திருமால் நீரோட்டிக் கன்னியாதானம் செய்ய அன்னை மீனாட்சியின் திருக்கரத்தை சிவபெருமான் பற்றும் எழிற்கோலம். நான் முகன் கீழே ஓமகுண்டம் வளர்க்க, சங்க நிதி. பதுமநிதி என்னும் இருநிதிக்கிழவர்களும் குரலிசைக்க நடைபெறும் மணக்கோலம் இது.

அடுத்தடுத்த தூண்களில் விநாயகர் மூஞ்சூறு வாகனத்திலும், முருகன் மயில்வாகனத்திலும் காட்டப்பட்டுள்ளனர். அம்மையப்பனின் மணக் கோலத்தைக் காண்பது போல எதிர்த் தூண்களில் வடிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்ததூண் ஒன்றில் இக்கோயில் திருப்பணியை மேற்கொண்ட செட்டியார் ஒருவரின் முழு உருவச் சிற்பம் இடம் பெற்றுள்ளது. அவருக்கு எதிராக ஒரு தூணில் வாள் ஏந்திய மன்னன் ஒருவனின் உருவம் இடம் பெறுகிறது. இவையாவும் 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் வடிக்கப்பட்டவையாகவே கருதத்தகும்.

முடிவுரையாகச் சில செய்திகள்.

கொற்றவாளீசர் என்னும் இத்திருக்கோயில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதற்குக் கட்டடக்கலைச் சான்றுகளும் கருவறையில் எழுதப்பட்டுள்ள 1381-ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டும் சான்று பகர்கின்றன.

இங்குள்ள செப்புத்திருமேனிகளும், சிற்பவடிவங்களும் இக்கோயில் வணிக வளம்மிக்க செட்டி நாட்டு மக்களால் பெரிதும் பேணப்பட்டதை மெய்ப்பிக்கின்றன. வணிகச் சாத்துகளுடன் பாதுகாப்பாகப் பல வீரர் குழுக்கள் சென்றன என்பதற்குப் பல கல்வெட்டுகள் ஆதாரமாக உள்ளன். இக்கோயில் வணிகச் செட்டிகளும், அவர்களின் பாதுகாவல் வீரர்களும் சேர்ந்து உருவாக்கியது எனக் கருதத்தக்கது. கொற்றவாளீசுவரர் என்னும் பெயர் கொண்டு இக் கருத்து

முன்வைக்கப்படுகிறது. கொங்கவாளர் என்றொரு படைப் பிரிவினர் கல்வெட்டுகளில் பேசப்படுகின்றனர். இன்றும் செட்டி நாட்டுப்பகுதியில் செட்டியார்களும், நாட்டார் என்னும் அம்பல காரர் சமுதாயத்தினரும் இணைந்து வணங்கும் தாய்த்தெய்வக் கோயில்கள் பல உள்ளன.

தற்போது சிவகங்கை தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் இக்கோயில் செட்டி நாட்டு மக்களால் மெரு கூட்டப்பட்டு தெய்வீக மணம் கமழும் சூழலுடன் திகழ்கிறது.

***

KOVILOOR ... LIBRARY, KOVILOOR 27400